# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 157/மா/2019**
**ஆணை நாள்: 28–2–2020**

திரு. M.A. முகம்மது தையூப்கான்,
திருநெல்வேலி. **– முறையீட்டு மனுதாரர்**

1. ஆணையர்,
திருநெல்வேலி மாநகராட்சி.

2. உதவி ஆணையர்,
மேலப்பாளையம் மண்டலம்,
திருநெல்வேலி மாநகராட்சி. **– எதிர் மனுதாரர்கள்**

திருநெல்வேலி, பெருமாள்புரம் தென்றல் நகர், கதவு எண். 1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M.A. முகம்மது தையூப்கான், என்பவரது 04.10.2019 நாளிட்ட முறையீட்டு மனு 09.10.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு எண்.157/மா/2019 என எண்ணிடப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

முறையீட்டு மனுதாரர் தனக்கு சொந்தமான காலிமனைகளுக்கு காலிமனை வரிவிதிப்பாக ரூ.85,900/- திருநெல்வேலி மாநகராட்சி தன்னிச்சையாக மற்றும் கூடுதலாக விதித்துள்ளதாகவும், காலிமனை வரியாக ரூ.34,384/- காசோலை மூலம் திருநெல்வேலி மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், அதனை பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகை வழங்கவில்லை என்றும், மேற்படி தொகை பெற்று கொண்டமைக்கு ஒப்புகை வழங்கவும், அதன் தொடர்ச்சியாக கட்டிட வரைபடத்தை பெற்றுக்கொண்டு அனுமதி வழங்க மேல் நடவடிக்கை தொடரவும் மாநகராட்சிக்கு உத்திரவிடவும் முறையிட்டுள்ளார்.

இம்முறையீட்டு மனு மீதான அறிக்கையினை சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவத்தின், 14.10.2019 நாளிட்ட அறிவிப்பாணையின்படி திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டல உதவி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டல உதவி ஆணையர் தனது 30.01.2020 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு

மனுதாரரின் காலிமனைக்கு காலிமனை வரியாக ரூ.85,960/- என நிர்ணயம் செய்யப்பட்டது என்றும், ஆனால் மனுதாரர் ரூ.34,384/- மட்டுமே காசோலை மூலம் செலுத்தியுள்ளார் என்றும், இதனைத் தொடர்ந்து மனுதாரர் மீதித்தொகை ரூ.51,576/-ஐ மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொண்டுள்ளார் என்றும், அரசாணை எண். 150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.11.2019 ன்படி சொத்துவரி பொது சீராய்வின்படி உயர்த்தப்பட்ட சொத்துவரி 31.03.2018 க்கு முன்பிருந்தவாறே முழுமையாக 100% மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் மனுதாரர் கூடுதலாக செலுத்திய தொகையினை கணக்கிட்டு உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்று மனுதாரரின் கட்டிடத்திற்கு புதிதாக விதிக்கப்படும் சொத்து வரியில் ஈடு செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை மற்றும் திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டல உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது இந்நேர்வில் மண்டல அலுவலரின் அறிக்கை ஏற்கப்பட்டது. முறையீட்டு மனுதாரர் கூடுதலாக செலுத்தியுள்ள வரிதொகையினை கணக்கிட்டு, மனுதாரரின் கட்டிடத்திற்கு புதிதாக விதிக்கப்படும் சொத்துவரியில் ஈடு செய்ய உரிய அரசாணைகள் மற்றும் விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டல உதவி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

4/7

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் 13/3/20

13/3/2020

பெறுநர்

1. திரு. M.A. முகம்மது தையூப்கான்,
த/பெ. அப்துல் மஜீத்,
நெ.1, தென்றல் நகர், பெருமாள்புரம்,
திருநெல்வேலி – 627 007.

2. உதவி ஆணையர்,
மேலப்பாளையம் மண்டலம்,
திருநெல்வேலி மாநகராட்சி
திருநெல்வேலி – 627 005.

3. ஆணையர்,
திருநெல்வேலி மாநகராட்சி,
திருநெல்வேலி – 627 007.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்